முரசொலி

வார இதழ்

2 அணு

மு. கருணாநிதி

முரசு 1 | சென்னை — 5 — 54 வெள்ளி | ஒலி 6

இவர்களும் 'பூர்ஷுவா'தான்!

முதலாளித்துவ நாடுகளென்னும் பாலைவனத்திலே ஒரு பொதுவுடமைத் தடாகம் இருக்கிறதென்ருல் அது மரணவரியாகத்தான் இருக்க வேண்டுமென்று பலரும் அபிப்பிராயப் படுகிருர்கள். சொத்துடைய ஒரு முதலாளி செத்துவிட்டால் அவன் ஆஸ்தியிலே ஒரு பகுதியை, வாரிசுக்குப் போய்ச் சேருமுன் அரசாங்கத்தார் எடுத்துக் கொள்வார்கள். இந்த மரணவரி, வெறும் ரூபாய் வருமானத்தை மட்டுமன்றி, நிலம், தோட்டம், நகைகள், விலையுயர்ந்த படங்கள், புத்தகங்கள், மற்றும் அசையும் பொருள், அசையாப் பொருள் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும். எனவேதான் வருமானவரி கொடுக்காமல் அரசினரை ஏமாற்றும் சீமான்கள் இந்த மரணவரியின் இரும்புப்பிடியிலிருந்து மீளமுடியாமல் தவிக்கின்றனர்.

இந்த மரணவரிக்கும் பல வடிவங்கள் உண்டு. இத்தாலி நாட்டின் பொருளாதார நிபுணரான ரிக்ஞேனே என்பவர் மூன்றே தலைமுறையில் சொத்து முழுதும் அரசாங்கத்தைச் சேரும் வகையில் ஒரு திட்டம் தயாரித்தார். இந்தியாவிலே சமீபத்தில் அமுலாக்கப்பட்டிருக்கும் 'எஸ்டேட் டூட்டியும்,' இந்த மரணவரியின் மற்றொரு வடிவந்தான். சமூகத்தின் ஒரு சிலரிடம் சேர்ந்து கொண்ட பணச்சுமையை கொஞ்சம் கொஞ்சமாக அரசாங்கம் பிடுங்கிக் கொண்டு, அப்படிச் சேர்ந்த தொகையை வேறு நல்லவழியில் செலவிடலாமென்பதோ, அன்றி ஏழை மக்கள் மீது ஏறிவிட்ட வரிப் பளுவைக் குறைப்பதென்பதோ தான் இந்த மரணவரியின் பின்னே அடைந்துகிடக்கும் பொதுவுடமைக் கொள்கை!

பூர்ஷுவாக்களிடமிருந்து அதிக வரிவாங்கும் இந்தக்கொள்கையை அன்றே ஆரியம் கடைப்பிடித்திருக்கிறது, வேறு ஒரு வழியில்! வழிமட்டுமல்ல வேறுபடுவது; அந்தக் கொள்கையும் அதற்கே உரித்தான நரிக்கொள்கைதான்!

தற்போது சீமான்கள் இருக்குமிடத்தில் அந்தக் காலத்து ராஜாக்கள்! அரசாங்கத்துக்குப் பதில் புரோகிதர்கள்! கையாண்ட ஆயுதத்திற்குப் பெயர் மரணவரியோ அல்லது 'எஸ்டேட் டூட்டியோ' அல்ல! அந்த விசித்திரத்திருநாமம் 'இரண்யகர்ப்பம்' என்பதாகும்!

அதாவது மனு வகுத்த சட்ட திட்டங்களின்படி க்ஷத்திரிய குலத்தில் ஒரு ஸ்வீகாரப் புத்திரன் கிடைக்கப் பெற்ருலும் கூட அவன் நேரடியாக பட்டத்து இளவரசனுகவோ, அல்லது அரசனுகவோ வரமுடியாது. மகுடாபிஷேகத்திற்கு முன்னர் அவ்விளவரசன் இரண்ய கர்பத்தில் பிரவேசிக்கும் சடங்கு நிறைவேறியாக வேண்டும். இரண்ய கர்ப்பமென்ருல் சுத்தமான தங்கத்திஞல் ஒரு பசுமாட்டின் உருவத்தைப் போலச்செய்து, அதை வேதப் பிராமணுளைக் கொண்டு, ஹோமாதி கிரிகைகளையெல்லாம் விதிப்படி செய்வித்து, சம்ப்ரோக்ஷனம் முதலியவைகள் செய்தானவுடன் (பசுவுக்குஉயிர் கொடுப்பதாகச் செய்யப்படும் சடங்கு) பட்டத்திற்கு இளவரசனுகவரக்கூடியவன் அந்த தங்கப் பசுவின் யோனித் துவாரத்தின் வழியாகப் புகுந்து வாய்வழியாக வெளியே வர வேண்டும். இது தான் இரண்ய கர்ப்பமென்பது. (இரணியம் — தங்கம்.) அதன் பிறகு அந்தத் தங்கப் பசுவை புரோகிதருக்குத் தானமாகக் கொடுத்துவிட்டு, மற்ற பிராமணர்களுக் கெல்லாம், அவரவர்களின் தரத்துக்குத் தக்கபடி, பூதானம், கோதானம், சொர்ணதானம், வஸ்திரதானம், அன்னதானம் முதலியவற்றைச் செய்துவிட்டு இளவரசனுக்கு புரோகிதர் அட்சதை தூவி ஆசீர்வதிப்பதுடன் முடிவு பெறுகிறது இந்த வைபவம்! இந்த மாதிரியான தங்கப் பசுதானந்தான் நேற்றளவும் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் நடந்து வந்ததாகச் சொல்லப்படுகிறது.

வயது வந்த மனிதனொருவன் பசுவின் யோனிவழியாகப் புகுந்து வாய்வழியாக வெளியே வரவேண்டுமாஞல் அதற்கு எவ்வளவு நிறையுள்ள தங்கம் தேவையாக இருக்கும்? அதன் மதிப்பு எத்தனை கோடி ரூபாய் பெறும்? இத்தனை தங்கத்தை யும் ஆரியன் — குடி மக்களிடத்திலிருந்துதானே வசூலித்திருக்க வேண்டும்? — இப்படி அடுக்கடுக்காக கேள்விகளைக் கேட்டு மூக்கிலே விரல்வைத்த பிரஜைகளை மனுவின் எழுத்தாணி நரகத்தைக்காட்டி ஈட்டி போல தாக்கியது! பதில் சொல்ல முடியாமல் கதிகலங்கியது திராவிடத்து வீர பரம்பரை!

நேற்று ரிக்ஞேனே மூன்றே தலைமுறையில் பொருளாதார

8-ம் பக்கம் பார்க்க

இவரைப்பற்றி....



பேனு ஓவியம்:- 4-ம் பக்கம்

நடைப் பிணங்களுக்குதவா நாலு லட்சம்!

★

காந்தியின் பெயரால் பாழ்! பாழ்!!



○

உலகத்தின் இரண்டாவது அழகான கடற்கரை என்று புகழப்படும் மரீனா—அதற்குப் பக்கத்திலே பஞ்சு மேகங்களை நெஞ்சாரத் தழுவ துடிதுடித்து நிற்கும் களங்கரை விளக்கம்—

எங்கிருந்து பார்த்தாலும் நீலக்கடலின் நேர்த்தியான தோற்றம் தெரியும்படி கட்டப்பட்டிருக்கும் ஓஷியானிக் ஓட்டல்—

அடையாற்று தென்றலை மற்றவர் அடையாமல் சிறைசெய்து நிற்கும் செட்டிநாட்டுச் செல்வரின் அரண்மனை—

இப்படி சென்னையை சூழ்ந்து நிற்கும் மாடமாளிகைகளின் பட்டியல் பெருகப்போகிறது. கிண்டியிலுள்ள ராஜபவன் தோட்டத்தில் நான்கு லட்சம் ரூபாய் செலவில் கூடகோபுரமொன்றை எழுப்பப் போகிறார்கள். வெள்ளிப் பணத்தை வாரி இறைக்கும் அந்த கோடீஸ்வரர் யாரென்று கேட்கத் தூண்டும். கோடீஸ்வரர் குடியேறுவதற்காக அல்ல இந்த கோபுரம் கட்டப்படுவது! ஏழை பங்காளன் காந்திக்காக நாலு லட்சம் ரூபாய் செலவில் கோபுரத்தோடு அமைந்த பிரார்த்தனைக்கூடத்தை எழுப்பப்போகிறார்கள்! இதற்குதான் 'நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்' என்ற தோரணையில் சென்னை கவர்னர் பொது ஜனங்களுக்கு சென்ற வாரம் அறிக்கை விடுத்துள்ளார்.

எளிமைதான் வாழ்க்கை இன்பத்தின் ரகசியம் என்றுபோதித்தவருக்கு அரண்மனை போன்ற பிரார்த்தனைக்கூடம் அமைக்கப் போகின்றனர், அவர் தம் சிஷ்ய கோடிகள்.

அன்றொருநாள் இப்படித்தான், தலைஉயர்த்திப் பார்த்தால் மயக்கம்வரும் அளவுக்கு உயரமான பகோடாக்களை நாடெங்கும் எழுப்பினர், பௌத்த பிட்சுக்கள். பாவம்! அவர்கள் அறியார், அந்தக் கோபுரங்களுக்குப் பக்கத்திலேயே பௌத்தம் ஆழக்குழி தோண்டி புதைக்கப்பட்ட வித்தையை! சரித்திரம் உணர்த்திய அந்தத் தவறை மீண்டும் துணிவோடு செய்யப் போகிறார்ககள், வார்தாவீரர்கள்!

நாங்கள் காந்தியைத் தூற்றவில்லை. இந்திய உபகண்ட மெங்கும் விடுதலை எழுச்சி என்னும் வித்தூன்றி மறைந்தவர், காந்தி அடிகள். அந்த வீரனின் பெயரை நம்முடைய இருதயம் ஜெபித்துக் கொண்டே இருக்க 'இந்தியா' என்றிருப்பதை 'காந்திநாடு' என்பதாக மாற்றுங்கள் என யோசனைகூறியவர்களா காந்தியைத் தூற்றுபவர்கள்?

இல்லை; இல்லை. மெருகு கலையாத மெருன் கலர் மோட்டாரில் பவனிவரும் ஆட்சிபீடம் ஏறிகளே! சர்வோதய தினத்தன்று சர்க்கா சுழற்றினால் மட்டும் போதாது. அதோ பாருங்கள்—காயமே இது பொய்யடா என்று பேருபதேசம் செய்பவர்கள் வசிக்க கடல் போன்ற மடாலயங்கள் நாடெங்கும் நிறைந்து கிடக்கின்றன! கால்கள் கடுகடுக்க நாள் முழுதும் ஜட்கா இழுக்கும் குதிரைகளைக்கூட தள்ளியடைக்க லாயங்கள் இருக்கின்றன. வீடிழந்து—ஆனால் இன்னும் இந்திய உபகண்டத்தின் பிரஜா உரிமையை மட்டும் இழக்காத இந்த நடைபாதை வாசிகளை சற்றே பாருங்கள்-ஒண்டுவதற்கு ஒரு ஓலைக்குடிசையின்றி அவர்கள் படும் அவதியைக் கவனியுங்கள்; என்று சொல்லி அவர்கள் பார்வையை விருந்து மண்டபத்திலிருந்து சுருண்டு போனவர்கள் பக்கம் திருப்புகிறோம்!

கொசுக்கூட்டங்களை உற்பத்தி செய்யும் சாணிமேடு—அதற்குப் பக்கத்திலே விஷக் கிருமிகளை விருத்திசெய்யும் சாக்கடைக் கால்வாய் — இவைகளுக்கிடையிலே 'குஞ்சுகுளுவான்'களோடு ஜீவனம்நடத்தும் ஜீவராசிகள் — இவை யாவும் அலங்காரச் சென்னையில் எங்கு திரும்பினுலும்பார்க்கக்கூடிய அலங்கோலத் தோற்றங்கள்!

காந்திக்கு நினைவுச் சின்னம் எழுப்ப நான்கு லட்சம் ரூபாய்கள் தேடி அலையும் கவர்னர்பிரான் ஒரு பக்கம்—மாடுமனை இழந்து—வீடு, சுகம்-இவைகளைப் பறிகொடுத்து சாலை ஓரத்தில் சஞ்சலப்படும் வேலையற்றோர் கூட்டம் மற்றொரு பக்கம்!

அங்கே பொன்னார் மேனியில் பூட்டி மகிழ மாம்பழ மாலைகள்—உல்லாசப் பயணம் போகும் போது பத்திரமாக அவைகளைப் பாதுகாக்க பாங்கிகளின் பாதாள அறைகள்—

இங்கே பானையின் அடித்தளத்தை அளந்தபடி பழைய சோறு கொஞ்சம் இருக்கும்—வேலை தேடிச் சென்றிருக்கும் தன் சேனை வரட்டும் பானையைத் திறக்கலாம் என்ற பெரு நினைப்பில் அவள் ஆழ்ந்திருப்பாள்—பின்னர் பானை திறக்கப்படும், சோறு இருக்கும், அங்கே! பாவம்! நாயும்—பூனையும் வந்து போன கதையைச் சொல்ல காவலுக்கு வைத்துப்போன குழந்தைதான் கைகொட்டி நிற்கும்! எங்கே சொல்லி அழுவார்கள் இந்த சோகக் கதையை பக்கத்திலிருக்கும் அரசமரத்துப் பிள்ளையாரின்மேல் ஊறும் எண்ணெயை நாய் நரிகள் நக்கி விடுமோ என்று அஞ்சி யானைத் தலையுடைய எம்பெருமானுக்கு கோயில் எழுப்பி, இரும்புக் கதவால் சிறை செய்திருக்கின்றனர்.

வீதிக்கு வீதி பிள்ளையார் கோவில்—அந்தக் கோவிலுக்குப் பக்கத்தில் நாதியற்றவர் கூட்டம்!

சின்னஞ்சிறிய நடைபாதை—அதை உறைவிடமாக்கிக் கொள்ள எண்ணற்ற நடைப் பிணங்கள்!

கண்களிலே இரத்தக்கறை படியவைக்கும் இந்த கொடுமைக் காட்சிகள்,தான் கவர்னராக இருக்கும் சென்னையில் மட்டுமே என்பதை ஸ்ரீ பிரகாசாவால் நம்ப முடியாமல் இருக்கலாம்! காரணம் அவருக்குத் தெரிந்தது சென்னையில் இரண்டே இடங்கள். கங்காணியாக இருந்து பணியாற்றும் ராஜ்யத்துக்கு அவ்வப்போது விஜயம் செய்யும் வடநாட்டுத் தலைவர்களை வரவேற்கப் போகும் போது பார்த்த மீனம்பாக்கம் விமான நிலையம்! மற்றொன்று கோலெடுத்தவனைக் கண்டு நடுங்கி நிற்கும் குரங்கைப்போல—உள்ளம் ஒடுங்கி—இன உணர்ச்சி குன்றிப்போன கைதூக்கிகள் நிறைந்த சட்டசபைக் கூடம்!

"யாரடா இவர்கள்? பாரத நாட்டில் கல்கத்தா, பம்பாய், கயை முதலிய இடங்களிலெல்லாம் எப்போதோ காந்திக்கு ஞாபகச் சின்னங்கள் எழுப்பி விட்டார்கள்! சென்னையில் மட்டும் எதற்கெடுத்தாலும் தடையா?"—இப்படி ஆயாசப் பெருமூச்சு சிற்சில இடங்களில் கிளம்பலாம்.

நினைவுச் சின்னத்தை தாக்குபவர்களல்ல நாங்கள்! நினைவுச் சின்னம் அமையப் போகும் விதத்தைதான் நாங்கள் தாக்குகிறோம்!

முன்னொரு சமயம் தொழிலாளி வர்க்கத்திற்கு ஒரு சுவர்க்க

-ம் பக்கம் பார்க்க

தலையங்கம்

சென்னை (7—5—54) வெள்ளி

விழித்தெழுந்த மொழிப் போரே! வா! வா! வா!

அரசியல் விழிப்புக்கும், எழுச்சிக்கும், மாற்றங்களுக்கும் அடிப் படைக் காரணங்கள் பல இருந்தாலும், அந்த விழிப்பையும், எழுச்சி யையும், விளைவிக்கக் கூடிய கழனியாக-விடுதலைப் போர் என்னும் எழிலோவியம் தீட்டப்படும் வண்ணத் திரையாக அமைந்திருப்பது அந் தந்த நாட்டின் தாய் மொழி ஆர்வம்தான். தாயக விடுதலை என்னும் பேரிகை தாய்மொழியின் பாசறையில் தயாரான தளபதிகளால்தான் கொட்டப்படும். உலக தேசங்கள் உரைக்கும் வரலாறுகள் எல்லாம் இந்த உண்மையை மறைத்திடவில்லை. அடிமைத்தனத்தை உமிழ்ந்து விட்டு ஆனந்த சுதந்திரத்தை அணைத்துக்கொண்ட நாடுகளும் சரி, அன்னியக்கொடி பறந்திடவிடோம் என அலைகடலென ஆர்ப்பரிக்கும் பூமிகளும் சரி, தாய்மொழிக்கு வணக்கம் செலுத்தி விட்டுத்தான் களம் புகுந்தன. இனிப் புகவும் தயாராயிருக்கின்றன. "சுதந்திர மண்ணில் வாழவேண்டும்" என்று சூளுரைத்துக் கிளம்பும் வீரர் களும், "சுற்றி வளைத்துவிடவேண்டும் ஒரு நாட்டை" என்று சூதுரைத்துக் கிளம்பும் வீணர்களும் தங்களின் முதல் ஆயுதமாக மொழியைத்தான் பயன் படுத்துகின்றனர். விடுதலை வீரர்களால் பயன்படுத்தப்படும் தாய்மொழி ஆயுதம், பசுவின் கோம்பு போன்றது. பசு, எதிர்த்த வரைத்தான் எதிர்க்கும். அடிமைத்தளை வீசுவோர் ஏந்திடும் மொழி ஆயுதமிருக்கிறதே; அது இரை தேடிஅலையும் புலியின் நகம்—கோரப் பல் போன்றது.

அத்தகைய புலிநகங்களாலும், கோரப் பற்களாலும் பிராண்டப் பட்டு, கிழித்தெறியப்பட்ட எத்தனை எத்தனை சுந்தர பூமிகள் வரலாற்றுச் சுவடிகளிலே சிகப்பு நிறத்தால் எழுதப்பட்டிருக்கின்றன என்பதை எண்ணும்போது நெஞ்சு துடித்திடத்தான் செய்யும்.

ஒரு நாட்டை வளைக்க முதலில் மொழியை அனுப்பு என்பார்கள். அப்படி வளைக்கப்பட்ட காடுகள்—துளைக்கப்பட்ட நாகரிகங்கள் எண் ணிலடங்கா.

தமிழரின் மொழியும், நாகரிகமும், நாடும் ஆரியர் புகுத்திய சமஸ்கிருத மொழியால் சீரழிந்ததை எவர் தான் மறுக்க முடியும்?

ஆங்கிலேயன் இந்திய உபகண்டத்தைக் கட்டியாளுவதற்கு அனுசரணையாக இருந்தது அவன் நுழைத்த மொழிதானே!

ஐரிஷ் மக்களின் விடுதலை ஆர்வத்தைத் தடுத்து நின்றது அவர் கள் மீது புகுத்தப்பட்ட மொழி ஆதிக்கம் தானே!

எழுநூறு ஆண்டு காலம் தங்களின் சுதந்திரத்திற்காகப் போரா டிய அயர் மக்கள் போராடிப் போராடிக் கடைசியில் அலுத் துப் போய்விட்ட நேரத்திலேதான்—வெற்றி கிடைக்காத காரணத்தை உணர்ந்தனர். அவர் தம் பழம் பெரும் மொழியாம் கேல் மொழி கேட் பாரற்றுக் கிடந்தது. கேலிக்குரிய தாய் சிதைந்து நின்றது. அயர்லாந் தின் உயிரையும், கலை மாண்பையும் தங்களின் சொந்த மொழியினுல் தான் காப்பாற்ற முடியும் என்ற முடிவுக்கு அந்நாட்டு மக்கள் கொண்டு வரப்பட்டனர். ஐரிஷ் மக்களைப் பொருத்தவரையில் ஆங்கில மொழி அவர்கட்கு அவ்வளவாக அன்னிய மொழி அல்லவாயினும் தங்களின் பண்பாடும், கலையும் சமுதாய எழுச்சியும் கேல் மொழியோடுதான் கலந்து கிடக்கின்றன என்று உணர்ந்து கொண்டனர். கேல் மொழி யின் மாசு துடைக்கப்பட்டு மாளிகைக்குக் குடியேற்றப்பட்டது. மொழி ஆர்வம், மூடிக்கிடக்கும் விழியைத் திறக்குமன்றோ? அயர்ந்த அடிமை நித்திரையிலாழ்ந்திருந்த ஐரிஷ் நாட்டை எழுப்பி விடுவதற்கு கேல் மொழியின் வளர்ச்சி பெருந்துணை புரிந்தது. அரசியலின் பரி பூரண மாற்றத்திற்கு அதுவே காரணம் என்று கூற முடியாவிட்டாலும் ஒரு திருப்பத்திற்கு; அதுவும் நல்ல திருப்பத்திற்கு அது கைகாட்டி யாக நின்றது. அரசியல் விழிப்புக்கும் எழுச்சிக்கும், மாற்றத்திற்கும், மொழியும் காரணமாகிறது என்பதை, அண்மையில் நடை பெற்ற தேர் தலின் வாயிலாக் கிழக்கு வங்காளம் நமக்கு நிரூபித்துக் காட்டியிருக் கிறது. வங்க மொழியைப் புறக்கணித்து, உருதுக்கு விருது வழங்கிய வர்கள் வீழ்ந்தார்கள்—வீழ்த்தப்பட்டார்கள் என்ற செய்தியை ஜெக மறியும்.

மேற் காட்டியவைகளைப் போலவேதான் திராவிடத்திலே [illegible] தெழுந்துள்ள அரசியல் எழுச்சி, மொழிப் போரை முதல் படி[illegible] கொண்டதாகும். ஆச்சாரியார் ஆட்சியின் முதல் அத்தியாயம் முடி[illegible] தற்கு, அந்த மொழிப்போர் காரணமாக இருந்தது மட்டுமல்லாமல், வட நாட்டாரின் ஆதிபத்ய வெறிக்கு முதன் முதலாக அடிக்கப்பட்ட சாவு மணியாகவும் அது இருந்தது. எந்த மண்ணும், மொழிகாக்கப் புறப் பட்டவர்களுக்கு கல்லறை எழுப்ப இடம் கொடுத்ததில்லை. இந்த மண்ணிலேதான் வேதியர் குலத்து வித்தகர்—நிரந்தர மாஜி சென்னை அமைச்சர்—ஆச்சாரியார் அவர்கள் தாலமுத்துக்கும் நடராசனுக்கும் கல்லறை கட்டினார். ஆயிரமாயிரம் வீரர்கள் தாய்மார்கள் உட்பட சிறைக்கோட்டம் நண்ணினர். வட நாட்டு ஏகாதிபத்தியம், தன்னு டைய பிடியை பலமாக்கிக் கொள்வதற்காக விரித்த பாஷை வலையை அறுத்தெறிந்தோம்—அன்று ஓடிய அந்த மொழி—ஆமாம் இந்தி மொழி —மீண்டும் புகு[illegible] நடத்திப் பார்க்கிறது. புது டெல்லியிலேயிருந்து நமக்குக் கிடைக்கி[illegible] செய்திகள் செந் தேளின் கொடுக்குகள் போல் இருக்கின்றன. இந்தி யைப் பொது மொழியாக்கித் தீர வேண்டுமென்று வடநாட்டுத் தலைமை முகாம்கள், ஆதிபத்ய வெறியர்கள் அனைவரும் அலறிக்கொண்டிருக்கி றார்கள். அவர்களுக்குத் துதி பாடும் துரோகிகள் சிலர் தமிழகத்தில் இந்திக்குத் துந்துபி முழங்குகிறார்கள். மே, இரண்டாம் நாள் சென்னை யில் நடைபெற்ற ஒரு நாடகக் கழக விழாவைத் துவக்கி வைத்துப் பேசும்போது, நிதி அமைச்சர் சுப்பிரமணியம், இந்தியாவுக்கு ஒரு பொது மொழி அவசிய மென்றும், அதற்காக தென்னாட்டு மக்கள் இந்தி யைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும் உபதேசம் செய்திருக்கிறார். ஆச்சாரியார் வார்த்தையிலே கூற வேண்டுமானால் விபீஷணத்தனம் செய்திருக்கிறார்; வட நாட்டின் மீது பக்தி சிரத்தை யோடு!

இந்தி, பொது மொழியாக வேண்டுமென்று தென்னகத்தின் ஒரு மூலையிலே மூளிக்குரல் கிளம்பும் போது—அங்கே வடக்கே ஆமதா பாத்திலே இந்தியை எதிர்த்து எத்தகைய கம்பீரமான குரல் ஒலிக் கிறது என்று கொஞ்சம் கேளுங்கள். "**ஈட்டி முனையின் உதவி கொண்டுதான் இந்தியை எம்மீது திணிக்க முடியும்**" என்பதாக குஜராத் பல்கலைக் கழக மேல் சபைக் கூட் டத்திலே ஒருவர் அறை கூவல் விடுத்திருக்கிறார். ஒருவர் என்றால் சாதாரணமானவரல்ல! "அரிஜன்" பத்திரிகையின் ஆசிரியர் தோழர் **மகன் பாய் பி. தேசாய்** தான், மேற் கூறிய வீரமொழிகளை இந்தி ஆதிபத்யத்துக்கு எதிராக வீசியிருக்கிறார். பம்பாய் அரசாங்கம், இந்திக்குத் தரும் தனிச்சலுகையைக் கண்டித்து குஜராத் மக்களின் குரல் எழும்பியிருக்கிறது என்றால் உள்ளூரிலேயே விலை போகாத அந்த நொண்டி மாட்டை ஓட்டிக்கொண்டு—அந்த நொந்துபோன மொழிக்கு சிந்து பாடிக்கொண்டு — பொதுமொழியாக்குவோம் என்று போதை மொழி பேசுவானேன்! வாதை பல புரிவானேன்!

ஈட்டி முனையின் உதவி கொண்டுதான் இந்தியை திணிக்க முடியும் என்று இந்திக்கு எதிர்ப்புக்குரல் வழங்குகிறார் "அரிஜன்-ஆசிரி யர். அந்த ஈட்டி முனையாலும் இங்கு இந்தியைத் திணிக்க முடி யாது என்பதுதான் திராவிடத்தின் ஏகோபித்த குரல். இந்தக் குரல் அலட்சியம் செய்யப்படுமேயானால் அதன் விளைவை வெறியர்கள் அனுபவித்தே தீர வேண்டும். வட நாட்டிலுள்ளோர் இந்தியைப் புகுத் தும் கிளர்ச்சியை மேற்கொண்டால், தென்னாட்டில் வட நாட்டு எதிர்ப்பு அதிகமாகுமென்று மக்கள் சபையிலே எச்சரிக்கப்பட்டும் கூட இந்தி பரப்பும் வேலையை அரசியலார் கைவிடுவதற்கான அறி குறிகள் எதுவும் புலப்படவில்லை. தென்னாட்டார் இந்தியைக் கற்க ஆவலுறுகிறார்கள் என்று ஒரு சில சுக்ரீவர்கள் செப்பும் சொல் கேட்டு டில்லி பீடம், செயலில் இறங்குமானால் திராவிடத்தின் கோதிப்பை நிச்சயமாக அடக்க முடியாது.

சர்க்கார் அலுவல்களில் படிப்படியாக இந்தியைப் புகுத்தும் வழி முறைகளை ஆராய்ந்து சிபார்சு செய்யும் ஒரு குழு அமைக்கப்படும் என உள் நாட்டு மந்திரி டாக்டர் கட்ஜு, ராஜாங்க சபையில் அறி வித்துள்ளார்.

இந்தி பரப்பும் முயற்சி இது போதாது என அதிருப்தியோடு அலறுகிறவர் தொகை நாளுக்கு நாள் வடக்கே அதிகமாகிறது. தெற்கிலும் சிலர் இந்திக்குத் தெந்தினு பாடுகிறார்கள். இந்தச் சூழ் நிலைகள் எல்லாம் மீண்டும் ஓர் பெரும் மொழிப் போர்க்களத்தை, திராவிடத்தில் உண்டாக்கு வதற்கெனவே உதயமாவதாக நமக்குத் தெரிகிறது. இந்த முறையும் தாய்த்திருநாடு வாயைப் பொத்திக் கொண்டு இந்திக்கு வழிவிடப் போவதில்லை. சந்து பொந்துகளிலே, சாக்கடைத் துவாரங்களிலே, சந்தர்ப்ப இருளிலே — நுழைந்து நுழைந்து குழைந்து குழைந்து பேசும் இந்தி ஏகாதிபத்யம் எவ்வ ளவு பயங்கரமான மோகினி என்பது திராவிடத்திற்குப் புரிந்துவிட் டது. ஆட்டிப்படைக்கும் ஆதிபத்தியக் கொலு மண்டபத்தில் ஆடிப் பாடும் அழகியாம் இந்திப்பிசாசு, இந்தத் தரணியிலே தளுக்கி மினுக்கி வரலாம் —தமிழர் ஆதரவைப் பெறலாம்—என்று நினைக்கு மேயானால் அது வெறுங் கனவாகத்தான் முடியும்.

தமிழ்த்தாயின் முகத்திலே இனியும் தழும்புகள் ஏற்பட விட மாட்டோம். திராவிட மாதாவின் கண்களிலே இனியும் நீர் வழியப்

[7-ம் பக்கம் பார்க்க]

பேனாவியம்

புதிய அர்த்தநாரி!

கண்ணன் காட்டிய வழியிலே துரியோதனனைப்போல பீடு நடைபோட்டு-ஜனநாயக நங்கை துடிக்கத் துடிக்க, அவளுடைய துகிலுரிந்த ஆச்சாரியார் அரசியல் வானில் அஸ்தமனமாகி விட்டார். ‘அரசியல் ஒரு திறமையான தொழில் — சிவகமனப்பான்மையும் சிறு நரிக் கொள்கையும் இருந்தால்தான் அந்தத் தொழிலிலே வெற்றி கிடைக்கும்’ என்று எழுதி வைத்துப் போனன் இட்டாலி நாட்டு சாணக்கியன் மேக்கிய வெல்லி. அந்த பத்தாம்பசலிப் பள்ளியிலே பயின்று—ஏகாதிபத்யப் பேராசிரியனின் நூல்களைக் கற்று அவைகளை அமுலாக்க ஆட்சிபீடம் ஏறிய ஆச்சாரியார்கூட துறவறம்ஏற்றுவிட்டாரே என்ற நினைப்புதானே என்னமோ சோஷலிஸ்ட் தலைவர் தோழர்ஜெயப்பிரகாஷ்நாராயணும் ஓடேந்திவிட்டார்... மந்திரி பீடமென்னும் வற்றாத சாகரத்திலிருந்து விடைபெற்றுகாடேகிவிட்டார், ‘அரசியல் என்னும் சிற்றின்பத்தை இனி சற்றேனும் திரும்பிப்பாரேன்’ என்ற கடும் சபதத்தோடு!

தூரத்துப் பார்வைக்கு நேருவைப்போன்ற தோற்றம்—மேருமலையைப் போன்ற நிமிர்ந்த பார்வை—கொஞ்சம் துணிவுதான் இல்லையே தவிர ஆசிய ஜோதியைப்போல சேற்றிலே கல்லெறியமாட்டார் ... சுருங்கச் சொன்னல் நாகரிகமான நாக்கு படைத்தவர் ... இத்தனைக்கும் அடைக்கலனை ஜெயப்பிரகாஷின்பிரிவு பாரதமாதா வீட்டுப் பசு காணமற் போனதைப் போலத்தானே ஒழிய வீட்டுக்கு முக்கியமான ஆண்பிள்ளை மறைந்து விட்டதைப் போன்ற பெரிய நஷ்டமல்ல! தோழர் ஜெயப்பிரகாஷ் தாஜ்மகாலின் வெளியே நிற்கும் தூண்களைப் போல எதற்கும் உதவாதவர்.

‘நானும் ஒரு கட்சிக்குத் தலைவன் என்று பெயர் சொல்லிக் கொண்டுதானே இருந்தேன்; அந்தப் பாழாய்ப் போன கிருபளானி வந்தார்; என் பெயர் சொல்லும் தொண்டர்களையும் பிடுங்கிக் கொண்டாரே!’ என்று நாராயண் சஞ்சலப்படுவது நம் காதுகளில் ‘விழாமலில்லை!

ஆனல் ஜெயப்பிரகாஷ் சத்திரத்து சாப்பாட்டையும்—சாவடி திண்ணையையும் எதிர்பார்க்கும் சாதாரண சன்யாசியாகிவிடவில்லை. சரியான அட்சய பாத்திரத்தோடுதான் சாதுக் கோலம் பூண்டிருக்கிருர். அதாவது இனி அவர் ஆயுட்காலம் பூராவும் ஆச்சார்ய விநோபா பாவேயின் பூமிதான யக்ஞத்திற்கு உழைப்பாராம்—இன்னும் சொல்லப் போனல் “கல்கி” பனைப்படி அவாள் “ஆயுள்தானம்” செய்துவிட்டாள்!

இனி ஜெயப்பிரகாஷ் ஒவ்வொரு நிலச்சுவான்தார் வீட்டு வாசலிலும் கால் கடுக்க நிற்பார். 24 கோடியே 40 லட்சம் மக்கள் சொந்தத்திலே உழவு செய்ய நிலமின்றி பள்ளர்களாக, பறையர்களாக உழைக்கிருர்களே அவர்களுக்கெல்லாம் 50 லட்சம் பிரபுக்களிடமுள்ள நிலத்தை தானமாக வாங்கி அளிக்கப் போகிருர். பாவம்! மேகத்தைப் பார்த்து மோகனமாய் ஆடும் மயிலின் எதிரே நின்று “கலாப மயிலே! சல்லாப சுந்தரா! கொஞ்சம் இறகு போடேன்! உன் இறகைக் கருக்கிக் கொடுத்தால் தான் பட்டினி நோயால் வாடும் என் 24 கோடியே 40 லட்சம் பிள்ளைகளும் சுபீட்சமாக வாழ்வார்கள்” என்று பல்லிளித்து நிற்கிருர்!

எதிர்த்து நிற்பவர்கள்முன்னே “இதோ பாருங்கள் என் வெற்றிப் பட்டியலை! அன்றே செத்துவிட்டான் காரல்மார்க்ஸ்! இல்லையேல் என் வாகை மாலையைப் பார்த்து தூக்குப் போட்டுச் செத்திருப்பான்” என்று புன்சிரிப்பு புரிந்த வண்ணம் கதர் குல்லாய் அணிந்தபடி நிற்கிருர் ஜெயப்பிரகாஷ்! அவர் பக்கத்திலே யிருக்கும் விநோபா பாவேபெருஞ் சிரிப்பு சிரிக்கிருர்! பாபு ராஜேந்திரர் ஆசி தருகிருர் நேரு தன் நல்வாழ்த்தை அருள்கிருர்—பாவம்! அவர்களுக்கு வேண்டியதெல்லாம் காந்திக்குப் பிறகு ஒரு தேசத்தின் பிதாவென மக்களை மதிக்கச் செய்யும் ஒரு வயதான மனிதர்! அதற்கு ஆச்சார்யா விநோபாபாவேயை உபயோகித்துக் கொள்கிருர்கள்! நேருவுக்குத் தெரியும்-வெள்ளையன் காலத்தில் பத்தாயிரக்கணக்கில் ரூபாய்களைக் கொட்டிக் கொடுத்து ‘ராவ்பகதூர்’ பட்டங்களை வாங்கியதைப்போல இன்று போலி கௌரவத்திற்காகஆயிரம் ஏக்கரில்ஒருஏக்கரை தானம்செய்யும் வித்தையின் ரகசியம்! ஜெயப்பிரகாஷும் உணர்ந்து கொண்டிருப்பார். “சர்” பட்டத்தை தன் பெயருக்கு முன்னே சொருகிக் கொண்ட நிலச்சுவான்தார்கள் தான் இன்று “ஜே” கோஷமிட்டும் ஒரு அணு நிலத்தை பிச்சை போடும் கூட்டமென்று!

ஜெயப்பிரகாஷின் துறவுக் கோலம் இந்திய அரசியல் இராமாயணத்தின் இரண்டாவது காடேகு படலம்! ஏப்ரல் மாதத்து உச்சவெய்யிலின் கொடுமைதானே என்னமோ இந்த திங்கள் பார்ப்பனீய எட்டிப் பழம் அழுகாமல் காத்து நிற்கும் பனிப்பாறையாம் ஆச்சாரியாரும்—சோஷலிஸ்ட் கட்சியின் சின்னஞ்சிறு ‘ரெப்ரிஜிரேட்டரை’ ஓட்டுவித்த ஜெயப்பிரகாஷ் என்னும் ஐஸ் கட்டியும் உருகி ஓடிவிட்டன.

அரசியலில்தான் வெற்றி பெறவில்லையென்றாலும் கூட, வெளி உலகில் எங்கு அவர் வட்டமிடும் வண்ண நிலவாகத் திகழ்வாரோ என்று அஞ்சக்கூடும் அவர்சகாக்கள். அவர்கள் அச்சத்தைப் போக்கிவிட்டார். “அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது. நான் ஒரு போதும் பிரகாசமாகிவிட மாட்டேன்” என்று தன் செயல் மூலம் ஜெயப்பிரகாஷ் ஜெயபேரிகை கொட்டுகிருர்.

ஏதோ காந்திக்குப் பிறகு பாமரர்களின் கவனத்தை இழுக்க ஒரு விநோபா பாவே... அவருக்குப் பின்னர் மொட்டையடித்துக் கொண்டு முழங்காலுக்குமேல் துண்டு கட்டிக் கொண்டால் இவரும் ஆச்சாரிய ஜெயப்பிரகாஷ்ஜி யாகிவிடலாம்- இந்த திட்டத்தைப் புரிந்து கொண்டவர்கள் இவருடைய துறவுக் கோலத்தைக் கண்டு திடுக்கிட மாட்டார்கள்.

முரசொலி

ஆண்டு சந்தா ரூ. 6–0–0
ஆறு மாத சந்தா ரூ. 3–8–0

ஆறுமாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப் பட மாட்டாது.

கும்பலோர் கொலுவில்

இலட்சியம் உருப்பெறுவது அவரவர்களின் சிந்தனையையும் சூழ்நிலையையும்பொறுத்தது. தந்தையின் திறமைக் குறைவாலோ, தனயனின் அடங்கா தன்மையாலோதான் ஒரே குடும்பத்தில் வேறு வேறு அரசியல் கட்சிகள் தோன்றுகின்றன என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல; நன்மை, தீமைகள் எவை எவை என்பதை உணர விரும்பும் நல்லவர்கள் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

கடந்த மாத இறுதியில் நடைபெற்ற டில்லி பாராளு மன்றத்தில் “பெற்றோர்கள் குழந்தைகளை சரிவரப் பராமரிக்கத் தவறுவதால்தான் பிள்ளைகள் பெற்றோருக்கு எதிரான அரசியல் கட்சியில் ஈடுபடுகிருர்கள்” என்று பீகாரைச் சேர்ந்த தோழர் சின்ஹா பேசியிருக்கிருர். அதோடு மட்டுமல்ல, தென்னாட்டு அரசியலில் தந்தையும், மகனும், வேறு வேறு அரசியல் கட்சியில் இணைந்து பணியாற்றுவதற்குக் காரணம், தந்தையின் திறமைக் குறைவும், மகனின் கீழ்படியா தன்மையும் தான் என்று கூறி, சுப்பராயனையும், அவர் தம் புதல்வியையும் உதாரணமாகக் காட்டியிருக்கிருர் அவர். பிள்ளைகள், அவர்கள் ஆயுட் கால முழுதும், பிள்ளைப் பூச்சிகளாய், பேசாத பதுமைகளாய் வாழ்ந்துவிட்டு மண்ணாகப் போகட்டும் என்று எண்ணுகிருர் போலும் அந்த பீஹார் பேர்வழி! வாழ்கஅப்பேர்ப்பட்ட வடக்கத்திப் பண்பு! ஆனல் தென்னாடு ஊமைத் தனத்தின் உறைவிடமல்ல என்பதை அவர் தெரிந்து கொள்ள வேண்டும். கருத்து வேறு பாட்டிற்கு மதிப்பளிக்கும் நற்பண்பு திருவிடத்திற்கு உண்டு. இல்லாவிட்டால் காங்கிரஸ் பிரமுகர்களின் மாளிகைகளின் உள் வாயிலில் ஒரு பக்கம் கதர் மேலங்கியும் மறு பக்கம் கைத்தறியாலான கருப்பு மேலங்கியும் தொங்குமா?

புதல்வர்கள் நால்வரில், அவர்களுக்கு கொள்கையில் பற்றுதல் இருந்தாலும் இல்லாவிட்டாலும் வலுக்கட்டாயமாக வேறு வேறு கட்சிக்குள் திணித்து, எவர் கட்சி, ஆட்சிக்கு வந்தாலும் குடும்பம் குதூகலமாக வாழ்ந்தால் போதும் என்ற ‘அக்ராகார’ அரசியல் திராவிடர்களிடையே அறவே இல்லை. தந்தையின் கோபுர மாளிகையிலிருந்து வெளிக் கிளம்பி, கொதிக்கும் வெயிலில் நடைபோட்டால் அதை ஜனநாயகத்தின் மலர்ச்சி என்று சொல்லுவதா அல்லது தனயனின் அடங்கா தன்மை என்று சொல்லுவதா? சுப்பராயனின் புதல்வி சுந்தரபுரி நோக்கிப் பயணப்படவில்லை. சுருண்டு விழும் பாட்டாளி சமூகத்திற்கு சிறு உதவியாவது தம்மால் செய்ய முடியும் என்ற நல்லெண்ணத்தோடு அல்லவா மாற்றுக் கட்சியில் இணைந்திருக்கிருர்! ஜீவநாடியான இந்தக் கருத்தை விழுங்கிவிட்டு தோழர் சின்ஹா சிரித்துப் பேசுவதேன்?

சுயமரியாதை காக்க சுகவாழ்வை பலியிட்டவர்களும், உளம் கவர்ந்த பெண்ணை கைப்பிடிக்க உல்லாசக் கோட்டைகளை இழந்தவர்களும்தான் விந்தியத்திற்கு தெற்கே வதியும் ஆதிக் குடிகளில்அதிகம். சுகவாழ்வுக்கு அரசியலைத் துணைதேடும் சூதுமதி எங்களுக்கில்லை. ‘உரிமை’ என்ற மூன்றெழுத்துச் சொல் இருக்கிறதே, குடியரசுச் சட்டத்தில், அதற்கு எடுத்துக்காட்டாக எந்தநாடு விளங்குகிறது-திராவிடத்தைத் தவிர!

கலைத்தோட்டம்

பெருங்கதைப் பூமான்-விக்தர் ஃயூகோ

ஒளிவீசும் கற்களின் கோர்வை- வைர மாலை! மணம் வீசும் புது மலர்களின் தொகுப்பு-பூச் செண்டு! கற்பனை நிகழ்ச்சி களின் எழுத்து வடிவம்–ஒரு நல்ல நாவல்!

விக்தர் க்யூகோவின் எழுத் தோவியங்களில் வைரத்தின் ஒளி—மலரின் மணம் இவை களுக்குப் பஞ்சமில்லை. படிப் போரின் உள்ளங்களை 'பாசக் கயிறு' போட்டு கதாபாத்திரங்க ளோடு இழுத்துவரும் சக்தி அவருடைய நாவல்களுக்கு இருந்தது. சோகக் கட்டங்களில் இரும்பு நெஞ்சுகளையும் கரைத் துக் குழம்பாக்கி கண்ணீர் உகுக்கவைக்கும் பெருங்கதைப் பூமான்—நாவல் சக்ரவர்த்தி விக்தர் க்யூகோ. சுந்தரமாளிகை யில் சோபித வாழ்வு நடத்த வாய்ப்பிருந்தும், ஆக்ஞைகளை நிறைவேற்ற ஊழியர்கள் காத்துக் கிடந்தும் விக்தர் க்யூகோ நாவல் கள் புனைவதில் நாட்டம் கொண்டிருந்தார். எழுத்துப் பணி மீது அவருக்கு அவ்வளவு ஆசை! அத்துணை வேட்கை!

க்யூகோவின் தந்தை, வைர நெஞ்சன்நெப்போலியனிடம்தள கர்த்தனைகப் பணியாற்றிவந்தார். தந்தையின்செல்வாக்கு பிரஞ்சுத் தரணியெங்கும் பரவியிருந்த காலத்திலேயே க்யூகோ பிரான் சின் பெரும் பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார். அந்தச் சுற்றுப் பயணத்தில் நேப்பில்ஸ் நகரும் மாட்ரெட் நகரும் அவரது பிஞ்சு உள்ளத்தில் நீங்காமல் பதிந்து விட்டன.

விக்தரின் பள்ளிப் படிப்பு தொடர்ச்சியாக அமையவில்லை. கவிஞனுக விளங்கவேண்டும், கணிதநிபுணனுக திகழவேண்டும் என்ற ஆவல் விக்தரை அத் துறைக்கு இழுத்து வந்து விட்டது. 20-வது வயதில் க்யூகோ எழுதிய கவிதை யொன்று பிரான்ஸ் அரச மாளி கையின் கவனத்தை ஈர்த்தது. அரசகோட்டையின் வாயில் காப்போனிலிருந்து அந்தப் புரத்து மாதரசிவரை, அனைவரும் விக்தரின் கவிதையை ஒவ்வொரு கோணத்திலிருந்தும் சுவைத்தார் கள்.

விக்தர் க்யூகோ பெரிய கதாசி ரியர்தான் என்றாலும் பிரஞ்சுக் காரர்கள் எதிர்பார்த்த அளவுக்கு விக்தர் புகழெய்த முடியவில்லை. விக்தர் குடும்பத்தில் குறுக்கிட்ட சோக நிகழ்ச்சிகள் அவருடைய புதுப்புது எண்ணங்களை விழுங்கி விட்டதுதான் அதற்குக் காரணம்.

விக்தர் இளமைப் பருவத்தி லிருந்தே உளம் கவர்ந்த மாதொ ருத்தியை மணம் செய்துகொள்ள திட்டமிட்டிருந்தார். அந்தப் பெண்ணையே அவரது சகோதர ரும் காதலித்திருப்பதை விக்தர் எப்படி அறிவார்? க்யூ கோவுக் கும் அந்தப் பூவைக்கும் மண விழா நிகழ்ச்சி முடிந்ததும்தனது சகோதரனை பைத்தியக்கார ஆஸ் பத்திரியில் சேர்க்க வேண்டியது தான் அடுத்த வேலையாக இருந்தது விகதருக்கு! ஆமாம் விக்தரின் சகோதரனுக்கு பைத் தியம் பிடித்து விட்டது-காதலில் ஏமாற்றத்தால்!

மனிதனென்றால் அவனுக் கோர் இலட்சியம் வேண்டும் என்ற புதுவித்தை பிரஞ்சு நாட்டு பிரபுக்கள் வட்டாரத்தில் விதைத்து நடமாடும் அந்த மாமிச பிண்டங்களுக்கு இலக் கியத்திலே இனிப்பை உண்டாக் கியவர் விக்தர் க்யூகோதான் என் பதை யாரும் மறுக்க முடியாது. விக்தரின் 28 வது வயதில் அவர் எழுதிய 'ஹெர்னனி' என்ற நாடகம் பெரும் புகழைத் திரட்டி வந்து அவர் முன் நிறுத்தி, 15000 பிராங்குகளை யும் உண்டியல் தொகை போல அவரிடம் சேர்த்தது

அடுத்து எழுதிய 'நாட்டிர்டே டிம்பிளிஸ்' என்ற நாடகம் இலக் கிய உலகில் க்யூகோவிற்கு ஓர் நிரந்தர இடத்தை தேடித் தந்தது. அதுவரை அவரை மதிக்காத 'பெரிய இடங்கள்' அதன் பின் க்யூகோவை 'பிரஞ்சு அக்காடமி' கழகத்தில் சேரும் படி வற்புறுத்தின. அந்த நாட் களில் பிரான்சிலே ஒருவரை அந்தஸ்துள்ளவனுக மதிப்ப தற்கு 'பிரஞ்சு அக்காடமி' கழகத்தின் உறுப்பினர் பதவி ஒரு நற்சாட்சிப் பத்திரமாக விளங்கியது.

விக்தரின் 35வதுவயதிற்குமேல் 40 வயதிற்குள் அவர் எழுதிய நாடகங்கள் சோபிக்கவில்லை— நாவல்கள், உள்ள பெயரையும் சுடுகாட்டுக்கு அனுப்பக்கூடிய தாக அமைந்துவிட்டன. அந்த ஐந்தாண்டுகளும் விக்தர் வடித்த கண்ணீருக்கு அளவேயில்லை— எழுத்தில் அவர் அடைந்த தோல்விக்காக அல்ல அவர் கண்ணீர் வடித்தது; எழிலோவிய மென விளங்கிய அவருடையதி ருக்குமாரி, 'சீன்' நதியில்விழுந்து இறந்தது அவர் உள்ளத்தில் ஒரு துயர முத்திரையை பதித்து விட்டது.

அடுக்கடுக்காக வந்து மோதிய குடும்பத்தின் சோக அலைகள் இலக்கியத்திலே விக்தருக் கிருந்த நீங்கா பற்றை துடைக் கத் தொடங்கி விட்டது. திடீ ரென்று விக்டர் அரசியலில் நுழைந்துவிட்டார் 1845ல் விக் தர் பிரஞ்சுபீர் (பிரபு) ஆக்கப் பட்டார். 1851ல் ப்ரான்சிலே குடியாட்சி குடை கவிழ்ந்து போனதும் விக்தர் க்யூகோ நாடு கடத்தப்பட்டார். இறுபது ஆண்டுகள் தாயகத்திலே அவர் தலை காட்ட முடியவில்லை. அந்த இடைக் காலத்தில் வேறு வேலை யில்லாமல் உருவாக்கிய நாவல் களில் ஒன்றுதான் லெஸ்மிசர பிள் (ஏழை படும் பாடு) என்ற இணையற்ற உரை நடைக் காவி யம்.

மீண்டும் கொற்றவர் கள் கோலேந்தி முடியாட்சி செலுத்தத் தொடங்கிய பின் தனது 68வது வயதில் விக்தர் பிரான்சிற்குள் நுழைந்தார். அவ ருடைய வருகைக்காக இரு சோகத்தகவல்கள் பிரான்சின் நுழை வாயிலிலேயே காத்து நின்றன. ஒன்று விக்தரின் துணைவி இரண்டு ஆண்டுகட்கு முன்னமேயே இறந்து விட்டாள் என்பது, மற்றொன்று, ஒரு சாமான்யப் பேர்வழி விக்தரின் இரண்டாவது மகளை கூட்டிக் கொண்டு ஓடிவிட்டான் என்பது. தாயகமாம் பெருங் குடும்பத்தில், ஓர் சிறு கூடத்தில் வாழ்ந்த மனைவி மக்களைப் பார்க்க ஓடோடிவந்த வீரன் மகன்விவே கிக்கு தாயகம் வாசித்தளித்த வரவேற்பிதழ் இந்த சோகப் பட் டயங்கள்தாம்! அதன் பிறகு விக்தர் கதை புனைவதையே விட் டொழித்தார்; என்றாலும் உலகத் தாரிடத்தில் அவர் சேகரித்து வைத்திருந்த புகழ் குறைய வில்லை–அவரது 80வது பிறந்த நாள் விழாவில் 6லட்சம் மக்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். விக்தர் க்யூகோ 1885–ல் இயற் கை யெய்தினர். அப்போது அவருக்கு வயது 83.

விக்தரின் சவம் 10 நாட்கள் ஏழைகளின் பார்வைக்காக வைக் கப்பட்டு அவரது எண்ணத்திற் கிணங்க கடைசி ஆசைப்படி ஒரு பாரரியின் சவப்பெட்டியி லே வைத்து அடக்கம் செய்யப் பட்டது.

பேசும் குறிகள்

விக்தர் ஹ்யூகோ, பெயர் பெற்ற பிரான்ஸ் தேசத்து நாவலாசிரியர். அவருடைய நாவல்களில் மிகச்சிறந்தது 'லெஸ், மிஸர பிள்ஸ்' (ஏழை படும்பாடு) என்பதாகும். அது பிரசுர மான சில தினங்களுக்குள் மக்கள் எவ்விதம் அந்த நூலை அறிய விரும்புகிறார் கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக, க்யூகோ தன்னுடைய புத்தக வியா பாரிக்கு ஒரு கடிதம் வரைந் தார். அக்கடிதத்தில் மக் கள் தன் புத்தகத்தை விரும்புகின்றனரா, என்று எழுதாமல் ஒரு கேள்விக் குறியை (?) மாத்திரம் பெரிதாக வரைந்து அனுப் பினர். வியாபாரியும், புத்தி சாலி. அவன் என்ன செய் தான் தெரியுமோ? தன் பதில் கடிதத்தில் (!) இப் படி ஒரு அச்சரியக்குறியை மாத்திரம் பெரிதாகப் போட்டு அனுப்பினனும்!

முதல் பரிசு

அக்பர் தன் தோழர் அபுல் பாஸலைக் கூட்டிக் கொண்டு, மாலை நேரம் ஒரு நாள் தோட்டத்தில் உலா விக்கொண்டிருந்தார். தோட்டத்தில்அரண்மனைப் பையன்கள் சிலர் விளையாடி கொண்டிருந்தனர். அவர் களருகில் இருவரும் போய், 'பிள்ளைகாள்! என்ன விளை யாடுகிறீர்கள்?' என்று கேட்கவே, அவர்களில்ஒரு பையன், "ஐயா! எல்லாரும் பொய் சொல்ல வேண்டி யது. யார் மிகப் பெரிய அபாண்டமான பொய் சொல்லுகிறார்களோ, அவர் களுக்கு இறந்த பரிசு என்று வைத்து விளையாடு கிறோம்," என்றான். இதைக் கேட்ட அபுல் பாஸல், "குழந்தைகள்! பொய் பேசினவர்களைக் கடவுள் தண்டிப்பார்; அது, மகா பாபம். நீங்கள் எப்போதும் சத்தியமே பேச வேண்டும் என்று போதித்துவிட்டு, மேலும், 'உங்களைப் போலி ருக்கும்போது நான் பொய் பேசினதே கிடையாது' என்றார். உடன் அக்பர், 'தம்பி! இவருக்குத்தான் முதல் பிரைஸ் கொடுக்க வேண்டும்' என்றார்.

கருணாநிதி நிகழ்ச்சிகள்

மே—1. சேலம்
2 ”
8 ஆரணி
9 24–வது வட்டம் (சென்னை)
12 சென்னை (ஆர்பர்)
14 திருப்புவனம்(மதுரை
15 அருப்புக் கோட்டை.
27 ஆலந்தூர் (சென்னை)
29 பரமக்குடி
30 பீமநகர்

ஜூன் முதல் வாரம் தஞ்சை மாவட்ட சுற்றுப் பயணம்.

கொழும்பு மாநாடும் - :: :: கோல்லும் மனச்சான்றும் !

முகமதலி

“சேச்சே, இந்த மாநாட்டில் எனது குரலுக்கு இவ்வளவு எதிர்ப்பிருக்குமென்று தெரிந்திருந்தால் கலந்து கொண்டிருக்கவே மாட்டேனே. வருவதாக ஒப்புதல் தந்துவிட்டு, கடைசி நேரத்தில் எதையாவது சாக்குப் போக்குச் சொல்லி தப்பித்திருக்கலாம். ‘சண்டைவேண்டாம், சமாதானம், சண்டை வேண்டாம், சமாதானம்’ என்றுமுடிவு கட்டப்பட்டுள்ள இந்த மாநாட்டில், நானும் கலந்து கொண்டிருப்பதை பார்த்து டல்லஸ் என்ன நினைத்துக் கொள்கிறாரோ தெரியவில்லை. சொந்த நாட்டிலேயே நமக்கு அபார(!) செல்வாக்கு! அதோடு, நம்மை காத்து ரட்க்ஷிக்கும் அமெரிக்காவும் முகத்தைக் கடுகடுப்பாக்கிக் கொண்டால் என்னவது நம் கதி? குண்டூசி முனையின் கிறல் போன்ற எதிர்ப்பைத்தான் கிழ் வங்கம் கிறிக் காண்பித்தது: அதைப் பூசி மறைக்கவே ‘ஜக ஜால’ வித்தைகளெல்லாம் பலிதமாகவில்லை. அதோடு அமெரிக்காவின் சீற்றமும் சேர்ந்தால் நம்மை எந்தப் படுகுழியில் கொண்டுபோய் ஆழ்த்துகிறதோ தெரியவில்லை. ஒரே ஒரு வழி தான் உள்ளது; ஊர் சேர்ந்ததும் டல்லசுக்குக் கடிதமெழுதி ‘டாலர் சீமானே, தவறுகப் புரிந்து கொள்ளாதீர். நபிகளின் வழி வந்த நாங்கள் நம்பிக்கை மோசம் செய்யமாட்டோம்—என் தர்பார் உள்ளவரை என்றென்றும் உங்களது ‘மண்ணசை’க்கு சிரம் தாழ்த்தக் கடமை பட்டுள்ளேன்.’ என்று அதில் குறிப்பிட வேண்டியதுதான்.”

நேரு

“எப்படியோ எனக்கு புகழ் வந்து சேர்ந்துவிட்டது. நான் ஒரு பணக்காரக் குடும்பத்தில் பிறந்திரா விட்டால் இந்நிலைக்கு நான் வந்திருக்கவே முடியாது. பட்டேல் இருந்தார்; ஏதோ காரியங்களை முடித்து வைத்தார். அவர் இல்லாவிட்டால் காங்கிரஸ் சர்க்கார் சாதித்திருக்கிற ஓரிரண்டு சாதனைகளும் செய்திருக்க முடியாது. நான் என் வெளிநாட்டு இலாகாவை எடுத்துக் கொண்டேன் என்பதே, என்னோடு நெருங்கிப் பழகிய கிருஷ்ணமேனோன் போன்றவர்களுக்குத்தான் தெரியும். எப்போதுமே உள்நாட்டு பிரபுக்களை பகைத்துக் கொள்வதே எனக்கு எட்டிக்காய். அதனால்தான் பட்டேலுக்குப் பிறகு கூட, கட்ஜுவை அந்த இடத்தில் அமர்த்தினேன்.

உடலிலே உயிர் உள்ளவரைதலுக்காக இருந்துவிட்டு மண்டையைப் போடுவதற்கு வெளிநாட்டு இலாகாதான் சாலச் சிறந்தது. இதைப்போல, நான் கையாளும் மர்மவழிகளை அறிந்து கொண்டதால்தான் தென்னாட்டுக்குள்ளேயே தலைகாட்ட முடியவில்லை. எப்படியாவது அவர்களைத் திருப்திப் படுத்தி விடலாமென்றுதான் நானும், போகும்போதும், வரும்போதும் சென்னையில் இரண்டு மணி நேரம் தங்கித் தங்கிப் போகிறேன். தில்லிக்குப் போகும் போதும், கொழும்புவிலிருந்து திரும்பும் போதும் சென்னையில் இறங்கி நண்பர் ஆச்சாரியாரையும், காமராஜநாடாரையும் கண்டு பேசினேன். இந்தப் பயணத்தில் கொழும்பு மாநாடுபற்றி ஆச்சாரியார் முதல், எல்லோரும் ஆவலாக விசாரித்தார்கள். நடந்ததைச் சொன்னேன். அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஆனால், கொழும்பில் கூடியமாநாடு ஒரு ‘விளம்பரச்சாவடி’தான் என்பதை அவர்கள் எப்படி அறிவார்கள்! நிறைவேறிய தீர்மானங்கள் அமுதக் கனிகள் போன்றவைகள்தான் ஆனால் அவைகள் அமுலாகப் போவதே இல்லையே! அமைதியைப்பற்றி அழகாகப் பேசினேன் — ஆரவாரம் செய்தார்கள். ஒவ்வொருவர் மனதிலும் அந்த ஆரவாரத்தின் உண்மை உருவம் பதிந்திருக்குமென்று நினைக்கிறீர்கள்? பேரரசுகளின் பிணைப்பு வேண்டாமென்றுதான் கர்ஜிக்கிறோமே தவிர கொழும்பு மாநாட்டில் கூடியவர்களில் யார்தான் அமரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் கட்டுப்படாதர்வர்கள்! ஜினிவா மாநாட்டினருக்கு இதெல்லாம் தெரியாதவைகளா என்ன! நமக்குக் கடன் பட்டவர்கள்தான் இவர்கள் என்றெண்ணி கொழும்புத் தீர்மானத்தை அவர்கள் உதறித்தள்ளினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதையேன் நாம் பிரஸ்தாபித்துக் கொள்வானேன் என்று தான் நானும் இந்தியாவின் சார்பில் இந்தோசீனு'வில் போரைநிறுத்த வேண்டும் என்று பேசிவிட்டு வந்திருக்கிறேன்.”

கொத்தலவாலே

“என்னுடைய காலத்தில் ஒரு பெரிய மாநாடாக—சரிதத்தில் இடம் பெறக்கூடிய மாநாடாகக் கூட்ட வேண்டுமென்று எண்ணியிருந்தேன். அந்தஆசை இப்போதுதான் நிறைவேறியது. இந்த மாநாட்டினால் பலன் கிடைக்காதென்பதை நான் நன்கறிவேன். ஏனென்றால் இந்த மாநாடு அனைவரும் சேர்ந்து நடத்திய மாநாடல்லவே, நான்தானே என்ஆசையை மறைமுகமாக வெளிக்காட்டி இந்த மாநாட்டைக் கூட்ட வேண்டியிருந்தது. என்னமோ, மாநாடும் முடிந்தது, என்பெயரும் உலகெங்கும் அடிபடுகிறது. அதுதானே நான் எதிர்பார்த்த லாபமும்! யார் எதைப் பேசினாலும் அமரிக்கா சட்டை செய்வதாகத் தெரியவில்லை—நானும் பிரிட்டனின் தைரியத்தை வைத்துத்தான் மாநாட்டைக் கூட்டினேன் — மாநாடுகளால் மகத்தான சாதனைகள் ஒன்றும் நடந்தேறிவிடாது என்பதை எல்லா நாடுகளும் உணர்ந்து கொண்டன. இல்லாவிட்டால் ஐ. நா, சபை, நாதியற்ற முட்டைக்கூடாக, காலியான் நாடகக் கொட்டையாகவா இருக்கும்!”

—தென்னரசு

○

நடைப் பிணம்....

2-ம் பக்கத் தொடர்ச்சி

பூமியை காட்டிவிட்டு மறைந்தான் காரல் மார்க்ஸ் — பின்னர் கொடுமை தாண்டவமாடும் ரஷ்யாவை செல்வம் கொழிக்கும் சோவியத்தாக மாற்றி அதையே அவனுக்கு நினைவுச் சின்னமாக்கினான், லெனின்!

அந்த சிங்கத்தின் பெயர்கூற இன்றும் மாஸ்கோவில் சிரித்தபடி நிற்கிறது “லெனின் லைப்ரரி” 96 லட்சத்திற்கு மேம்பட்ட புத்தகங்களை தன்னுள்ளே அடக்கிக் கொண்டு! அங்கெல்லாம் அரசியல் தலைவனின் புகழ்பாட அறிவுச் சுரங்கம் தோண்டுகிறார்கள்!

இங்கோ பட்டணத்தின் ஒதுக்குப் புறத்தில்—யாரும் சுலபத்தில் போக முடியாத கிண்டியில்பிரார்த்தனைக்கூடம் எழுப்பப் போகிறார்களாம், பாரத புத்திரர்கள்!

கொட்டடி ஆபாசமாயிருந்தால் அதில் காலெடுத்துவைக்கத் தயங்குகிறது சீமைப்பசு—ஆனால் அந்த ஆபாசத்திலே மனிதன் விழுந்து புரளுகிறான்-அங்கேயே குடும்பம் அமைத்துக் கொள்கிறான்—சமைத்துச் சாப்பிடுகிறான்!

இப்படி தெருவோரத்திலே தேய்ந்தழிகிறது திராவிடத்து பெருநிலவு. தோலாடை போர்த்திய எலும்புக் கூடுகளாக உலவும் இந்த நடைபாதை வாசிகளுக்கு சதைத் துண்டங்களைப் பொருத்தும் வேலையை ஏன் காந்தியின் பெயரால் செய்யக் கூடாது என்று கேட்கிறோம், நாம்! நவகாளியிலே எஜமானை இழந்த நாயைப் பார்த்து கண்ணீர் வடித்தசெம்மல், இந்த ஆதரவற்றோரின் சார்பில் எழுப்பப்படும் மாளிகையைக் கண்டால் பூரித்துப் போவார்...குடிசையைக் காதலித்த அந்தக் குபேரனின் தொண்டுகளைப் போற்றுவதற்கு இதைவிட வேறென்ன நினைவுச் சின்னம் வேண்டும்?

நாலு லட்சம்ரூபாய் செலவில் எழுப்பப் போகும் பிரார்த்தனை மண்டபம் - அதற்கு வெளியிலே அனாதை மக்களின் அணிவகுப்பு —கண்கள் புண்ணாகும் இந்தக் காட்சி காந்தி அடிகளின் ஆவியைச் சிறைப் பிடிக்கும் காராக்கிரகமாகத்தான் இருக்க முடியும்-பிணமாகிவிட்ட காந்தியைத் தூக்கி நிறுத்தி அவர் மீது நாலு லட்சம் பீரங்கிக்குண்டுகளை வீசுவதைப் போலத்தான் இருக்கும்-நிச்சயம் அது பிரார்த்தனைக் கூடமாக இருக்காது என்பதை ஏழைகள் உலகத்தின் சார்பில் எச்சரிக்க விரும்புகிறோம்.

நான்கு லட்சம் ரூபாய்—நாலாயிரம் குடிசைகள்! நான்கு லட்சம் ரூபாய் — ஒரு பிரார்த்தனைக் கூடம்? அந்த நல்லவன் புகழை நானிலம் பாட இவைகளில் எது வேண்டும்? பூஜா மண்டபமா? அல்லது புகலற்றவர்கள் நல்வாழ்வா! இவைகளுக் கெல்லாம் பகுத்தறிவியக்கம் சுவர்னரிட மிருந்து தக்கதொரு பதிலை எதிர்பார்க்கிறது.

வெள்ளிக் கிழமைகளில் வீடுகள் தோறும்
கோள்கை முழங்கிடும் முற்போக்கு வார இதழ்

★ “ திராவிடன் ” ★

ஆசிரியர் :— என். வி. நடராசன்

விபரங்கட்கு :
16, ரிலையன்ஸ் மைஸ்மில் தெரு,
வால்டாக்ஸ் ரோடு,
சென்னை—1

★★★

பொன் வண்டு!

★★★ [உருவகச் சித்திரம்]

பூவரசம் பூ நடுவில் பதிந்திருக்கும் பவழ வளையங்களைப் போல தொடுவானம் எங்கும் செங்கதிரோன் வீசிய சிகப்புச் சாயத்தின் ஜொலிப்புப் பூச்சு! அந்தத் தேன் மலர்க் காடெங்கும் வண்டூதும் கானம்...அமுதுண்டு இருதயப் பசி துடைக்கும் கும்மாளம்...

செண்டு தொடுக்க பூக்கொய்ய நினைக்கும் பூவையின் ஓட்டம்...

பூவிதழ்கள் அமைத்துக் கொடுத்த மஞ்சக்கூடத்தில் மயங்கிக் கிடந்த பொன் வண்டின் மீது அந்தப் பாவையின் விரல்கல் பட்டன...குலைந்தது இன்ப விருந்து...சரிந்தது மகரந்தப் பொடி...!

வண்டின் கோபம் எல்லை மீறியது. "என் போதை கலைக்கும் பேதை யாரடி நீ?"—கண்ணைத் திறக்காமல் சொல்லை உதிர்த்தது அந்த வண்டுக் கனவான்!

"அற்பச் சிறுவனே! குழையும் கூந்தலுக்கு குளுமையைச் சேர்க்க மலர் பறிக்க வந்திருக்கும் மங்கை நான்...சற்றே விலகி நில்...அந்த ஒற்றை மலரும் எனக்கே சொந்தம்!"—இப்படிச் சொல்லி பட்டென்று கிள்ளினாள்—காம்பொடிந்து அவள் காந்தள் விரல்களில் காட்சி தந்தது அந்த சிகப்பு ரோஜா! ஊசியால் குத்திய விரியன் பாம்புபோல் சீறிப் பாய்ந்தது அந்த சின்னஞ்சிறுவண்டு...

"பொட்டுப் பூச்சியே! எட்டி நில்! இல்லையேல் தட்டி விடுவேன் உன் பறக்கும் சிறகை!"-இப்படி கொதித்துப் பேசினாள் அந்த செல்வக் குமரி...

வீரியம் விலை போகாதென்றெண்ணி சாந்தம் கொண்டது அந்த வண்டு! மிஞ்சிப் போனால் கெஞ்சிக் கேட்பதுதானே உலக வழக்கம்!

"கனகக் கொடியே! பசியால் துடிக்கும் இந்த ஏழையைப் பாரேன்...என் இன்பப் பேழையை இழுத்துப் போகும் ஏந்திழையே! **உனக்கு அழகுப் பண்டம் எனக்கோ வாழ்வு காக்கும் தின்பண்டம்**...தேனின் துளிகளை மொண்டு வருவேனென்று என் பெண்டு பிள்ளைகள் காத்து நிற்கும்! பட்டினிச்சாவு மனிதருக்கியற்கை. அதை ஏன் எங்கள் குடும்பத்துக்களிக்கிறாய்: வீண் பழியைச் சுமக்கிறாய்? குழைந்த கூந்தலால் உயிரிழப்பதும் உண்டா? துளியமுதம் இல்லையேல் அடியேன் சாவது நிசம்; பெருமையின் வடிவே! கொஞ்சம் கருணைகாட்டேன்"...

வண்டின் துயரகீதம் அவள் செவியில் படவேயில்லை... கொல்லென்று சிரித்து மெல்ல நழுவினாள்...அந்த செருக்கியின் சிரிப்பு வண்டின் வாழ்வைப் பொசுக்கிய பெரு நெருப்பு!

—மாறன்

அறிவியலே அழிந்துவிட்டாயா?

○

அரசாங்கமே, யார் பொறுப்பாளி இதற்கு?

மேகத்தை குளிர வைத்து மழையை பெய்விக்கிறான் விஞ்ஞானி—தூரத்துப் பொருளை கண்ணுக்கருகில் இட்டு வந்து காட்டுகிறது, தொலை நோக்கி! அதையெல்லாம் கண்டும்; கேட்டும் களித்துப்போன விஞ்ஞான உலகில், இன்னும் பொது மக்களை சிந்தனையற்றவர்களாக மதித்து சூது விளையாட்டுகள் செய்துதான் வருகிறார்கள் புதுப் புது 'நேபாலி பாபா'க்கள்!

திருச்சியிலிருந்து சென்னை வரும் வழியிலுள்ள புறக்குடி கிராமத்தில், செத்துப் போன பூஜ்யர் ஒருவரை மனதிலே கொண்டு மாதா கோயில் வந்து சடங்குகள் செய்தால் தீராத நோய்களெல்லாம் தீர்ந்துவிடுகிறதாம் — தம்பட்டமடிக்கிறார்கள் தசை வளர்க்கும் தனவான்கள்.

நோயின் இன்னலுக்கு இலக்கானவர்களை சற்றுநேரம் இருட்டறைக்குள் உட்கார வைத்து வெளியே அழைத்து வரப்படுகிறார்கள். அதன் பின் அந்த நோயாளி பக்கத்திலுள்ள பனந் தோப்புக்கு ஓடிப்போய் பனை மரத்தில் முட்டவேண்டுமாம். கோயிலைச் சார்ந்தவர் நோயாளி முடியைக் கொஞ்சம் வெட்டுவாராம்—இதுதான் அந்த 'ஜெகஜ்ஜோதி' ஆஸ்பத்திரியின் சிகிச்சை முறைகள். இத்தகைய முறைகளை செய்திபத்திரிகைகளில் படிக்கும் நமக்கே அந்த பக்திமார்க்கம் காட்டும் சிகிச்சை முறைகள் நெஞ்சைத் துளைக்கும் போது அந்தக் கிராமத்தின் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் எப்படிதான் சகித்துக் கொண்டிருக்கிறார்களோ? ஐயோ, விஞ்ஞானமே இன்னுமா இந்தியாவை விட்டு ஓடமாலிருக்கிறாய்! இக்கொடுமையை உன்னால் தாங்கிக் கொள்ளத்தான் சக்தியிருக்கிறதா?

விந்தியத்திற்கு வடக்கே இக்கொடுமைகள் நடந்திருந்தால் நாம் அதிக கவலை எடுத்துக் கொள்ளப் போவதில்லை. காரணம் அது பூசாரிகளின் பிறப்பிடம். தென்னகத்திலே அதுவும் தமிழகத்திலேயா இக்கொடுமை என்றெண்ணும்போது இதயம் வெடித்துவிடுவது போலிருக்கிறது.

இந்தச்செய்தியைவெளியிட்ட 'தினமணி' இதழ்கூட இந்த விசித்திர நிகழ்ச்சியை நம்பியதாகத் தெரியவில்லை. பழமையின் பாற்பட்ட பாசத்தால் அந்த வட்டாரத்தில் சுகாதாரக்குறைவு ஏற்பட்டிருப்பதாக சுட்டிக் காட்டியிருக்கிறது. மறைமுகமாக!நோயை தீர்த்துக்கொள்ளப்போகும் நோயாளிகள் அதற்குமாறாக நோயை பற்றிக் கொண்டு வந்தால் அதற்குப் பொறுப்பாளி இந்த அரசாங்கம்தான் என்று நாம் பகிரங்கமாக குற்றம் காட்டத்தான் செய்வோம்—மதத்திலும், மடமையிலும் நம்பிக்கையற்ற அரசாங்கமாயிருந்தால் அது உடன் முன் வந்து இப்பேர்ப்பட்ட தீச் செயல்களைக் கண்டிக்க வேண்டும். அதுதான் 'நாடாளும் நல்லவர்'களுக்கு அடையாளம்.

கேரள முரசு

○

தி. மு. க. மாதமிருமுறை

ஆசிரியர் :

கே. ஏ. கலையழகன்.

1–5–54 மே முதல்

வெளிவருகிறது

தனி இதழ் 0–2–0

ஆண்டுச்சந்தா ரூ. 3–12–0

நாடெங்கும் விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை.

விபரங்களுக்கு :

நிர்வாகி, **கேரள முரசு**

வண்டிப்பெரியார், திரு-கொச்சி.

விரைவில் ஆரம்பமாகிறது

[illegible]?

மு. க. வின் புதிய தொடர் கதை

விழி திறந்த...

(3-ம் பக்க தொடர்ச்சி)

பார்த்து நிற்க மாட்டோம்!

எம் விழிதிறந்த மொழிப்போரே! வா—வா—வா! விடுதலை வழி திறந்த மொழிப்போரே வா-வா-வா! பழி சுமந்த பாதக இந்தியே போ—போ—போ! இழிமொழியாம் உனக்கேன்ன ஆட்சியிங்கு; போ—போ—போ! என்ற உறுதி யெழுப்பும் பாட்டோடு, குருதி தரவும் சித்தமான கொள்கைவீரர் கூடிவிட்டனர்.—

கட்ஜு அறிவித்தால் என்ன?
கமிஷன் புறப்பட்டால் என்ன?
கனம்கள் கதறினால் என்ன?
இந்தியை இன்னும் பொது மொழியாக்கவில்லையே என்று
கனல்கள் கிளம்பினால் என்ன?

தமிழர் பட்டாளமே! நீ தயாராயிரு! தாலமுத்து நடராசன் சந்ததியே! நீ தயாராயிரு!

புதிய வெளியீடுகள்!

'முரசொலி' மே இதழில் வெளிவந்த

பரமபதம்-புதிய படம்

அழகான அட்டையில் — விலை 2 அணா

●

மனோகரா

புதிய பதிப்பு — விலை 8 அணா

●

முனா-கானா பதிப்பகம்

சென்னை-14

கடைசிப்பக்கம்

(?) திராவிட நாட்டில் "மாஸ்கோ" மணம் வீசுமா? அல்லது "பிசினஸ்" மணம் வீசுமா?

யாராலும் சுரண்டப்படாத, யாரையும் சுரண்டாத "பிசினஸ்" மணத்திற்குப் பெயர்தான் "மாஸ்கோ" மணம். அந்த மணம் திராவிடத்தில் வீசியே தீரும்.

(?) கருணாநிதி, ஈரோட்டில், தி. மு. க. போட்டி சர்க்கார் அமைக்குமேன்றும், புதுவை காரை போல போராட்டம் துவக்குமேன்றும் பேசியது உண்மை தானு?

பொதுக்குழுவின் முடிவுக்கு கட்டுப்படாதஎதையும், அண்ணுவின் அன்புக்குரிய தம்பிமார்கள் அவசரப்பட்டு செய்வது கிடையாது. "புதுவை, காரை போல—திராவிடத்து நகரங்களைப் பிடித்துவிட்டார்கள என்ற செய்தியைவிட, நேருவே கொடுத்துவிட்டார் என்ற செய்திதான் சீக்கிரம் வரும்—அதுதான் நேருவுக்கு பெருமையானதும் கூட!" என்றுதான் கருணாநிதி ஈரோட்டில் பேசினர்.

(?) 30 ஆண்டுகளாக இல்லாமல் இப்போது மட்டும் காங்கிரஸ் மகாசபையை தென்னுட்டில் கூட்ட திட்டமிட்டிருப்பதேன்?

தில்லை மாநாட்டிலே, நேருவுக்கு திடீரென்று தமிழ் மொழியின் மீது அன்பு பிறந்தது ஏன் என்று சிந்தித்தால் இந்தக் கேள்விக்கு சரியான பதில் கிடைக்கும். எல்லாம் வலைவீச்சு! வடநாட்டின் வஞ்சகத்தை மறைக்கும் பொன்பூச்சு!

(?) ராஜாஜி துறவுக்கும், ஜெயப்பிரகாஷ் துறவுக்கும் என்ன வித்தியாசம்?

முதல் துறவு, முடியாததால் ஏற்பட்ட துறவு! இரண்டாவது, கிடைக்காததால் ஏற்பட்ட துறவு!

(?) மேல் உலகத்தில் காந்தி யாரும்கோட்சேயும் சந்தித்தால் என்ன பேசிக் கோள்வார்கள்?

'தங்கள் இருவரையும் பற்றி இன்னும் பூலோகத்தில் யாரும் புராணம் எழுதவில்லையே; ஏன்?' என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டிருப்பார்கள்.

(?) புரட்சிசிங்கம் மாசேதுங்கும், லெனினும் விஞேபாபாவேயிடம் பிச்சை வாங்க வேண்டுமேன்கிறேன்; நீர் என்ன நினைக்கிறீர்?

அவர்கள் பிச்சை கேட்டாலும், விஞேபா பாவேவுக்கு போடுவதற்கு நேரமில்லை; அவர்தான் "தானம்" வாங்கிக்கொண்டிருக்கிறரே, "பாவம்"!

(?) திராவிட நாடு கிடைத்தால் தெருவெல்லாம் தேனும் பாலும் பெருகி ஓடுமா?

தேனையும், பாலையும் அப்படியெல்லாம் வீணுக்க மாட்டோம். அவ்வளவு நிர்வாகத் திறமையற்றதாயிருக்காது திராவிடத் தனியாட்சி.

(?) காமராசர் — ஆச்சாரியாரின் கல்வித்திட்டத்தை வாபஸ் வாங்குவாரா?

ஆச்சாரியார் ஏன் விலகும்படி நேரிட்டது என்பதை உணர்ந்திருக்கிற காமராசர் கல்வித்திட்டத்தை வாபஸ் வாங்காமல் இருப்பாரா?

(?) தான் மந்திரியானது தன் குலத்திலுள்ள ஒவ்வொருவரும் மந்திரியானதைப் போல என்று ஒருவர் பேசுகிருரே; இது எப்படியிருக்கிறது?

எப்படியிருக்கும்! மூக்கை அறுத்துக் கொண்ட 'புத்திசாலி' "அதோ என் கண்ணுக்கு கடவுள் தெரிகிறர்" என்று கத்தினனே; அது போலத்தான் இருக்கிறது.

ஜின்ஞ சொன்னர்

ஜின்ஞ முஸ்லீம் லீக்கை ஆரம்பித்த சமயம் ஒரு முறை இங்கிலாந்து சென்றிருந்தார். திடீரென்று காங்கிரசிலிருந்து வெளியேறி புதுக்கட்சி அமைத்ததை கேலி செய்யும் நோக்கத்தோடு ஒரு பத்திரிக்கை நிருபர் 'நீங்கள் முன்பு காங்கிரசிலும் இருந்தீர்கள், அல்லவா?' என்று கேட்டார். கிண்டலுக்கு பெயர் போன ஜின்ஞ 'ஆம்; நான் முன்பு எலிமெண்டரி ஸ்கூலிலும் படித்தேனே!' என்று சிரித்துக்கொண்டே பதில் சொன்னராம்!

குழு அமைப்போம்-கோடிமுழப்போம்

விஞ்ஞானம் பெற்றெடுத்த அழிவு சக்திகளைக் கண்டு உலகம் விம்மி, விம்மி அழுது கொண்டிருக்கிறது. எங்கே அந்தப் பயங்கர ஆயுதங்கள் இந்தப் பரந்த பூபாகத்தை பஸ்ப மாக்கிவிடுகிறதோ என்றஞ்சி அமைதி விரும்பிகள் நெக்கு, நெக்காக உருகிக் கொண்டிருக்கிறர்கள். ஆனல் ஆந்திர கேசரி, இதுபற்றி துளி அளவுகூட துக்கப்பட்டதாகத் தெரியவில்லை. சித்தூர் பகுதியில் தமிழர்களே பெரும்பாலும் வசிக்கிறர்கள்; ஆகவே சித்தூர் சென்னை மாநிலத்தோடு சேர்க்கப்பட வேண்டியதுதான் என நாம் பன் முறை வற்புறுத்தி விட்டோம். அப்போதெல்லாம் ஒப்புக் கொள்ளாத ஒரு உண்மையை தோழர் பிரகாசம் இப்போது ஒப்புக் கொண்டாலும், அந்த உண்மையை மறைக்க ஒரு புதிய திரையைப் போடுகிறர்—சித்தூர்—திருத்தணிப் பகுதியில் தமிழர்கள் அதிக மிருந்தாலும்—அவர்களெல்லாம் பிற்காலத்தில் வந்து குடியேறியவர்களாம்—செப்புகிறர் பிரகாசம்.

இது ஒன்று தான், தமிழ்ப்பகுதியை பிரகாசம் விட்டுக் கொடுக்காததற்குக் காரணமென்றல்—அந்தக் காரணத்தை நம்மால் எளிதில் புறமுதுகிடச் செய்ய முடியும்—சித்தூர் பகுதி நிலங்களின் பூர்வீக உரிமை சாசனங்களைப் புரட்டிப் பார்த்தாலே போதும், பிரகாசம் முக்காடிட்டு விடுவார்.

1910-ம் ஆண்டு வரை சித்தூர் தமிழ் நாட்டுடன்தான் இணைந்திருந்தது என்பதை பிரகாசம் மறந்துவிடக்கூடாது. இதையெல்லாம் உதறித்தள்ளிவிட்டுத்தான் பிரதமர் பிரகாசம், புதியகாரணம காட்டுகிறர்—இல்லை— உண்மைக் காரணங்களை மறைக்க செப்படி வித்தை செய்கிறர்எப்போதுமே செப்படி வித்தைக்கு 'நெடுநேர அப்லாஸ்' கிடைக்காது. பிரகாசம் இதை புரிந்து கொள்ள வேண்டும்.

பிரகாசத்திற்கு விடுக்கும்இந்த எச்சரிக்கையோடு, சென்னை சர்க்காரையும் கேட்டுக் கொள்கிறேம்—எல்லைக்குழு நியமிக்கும் விஷயத்தில் தாமதமோ கவனக் குறைவோஏற்பட்டுவிடக்கூடாது: காலம் கடத்தினல் புதிய காரணத்தின் பட்டியல் விரியும்; நியமிக்கப்படும் எல்லைக்குழு, நீதியின் சாரலிலே, நேர்மையின் அடிவாரத்திலே நின்று தீர்ப்பளிக்க துணைநின்று ஆவன செய்ய வேண்டும். திருத்தணித் தகராறை வைத்து ஒரு புதிய 'ஸ்டண்டை' நடத்த திட்ட மிட்டிருக்கும் பிரகாசத்திற்கு உண்மையை உணர்த்த வேண்டும்.

இவர்களும். . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேதம் ஒழியும் முறையைக்காட்டினன்! அன்றேகாட்டி விட்டான் மனு, எகிப்திற்கும்—ரோமாபுரிக்கும் 'உணவும், உடுப்பும் அனுப்பிவைத்த திராவிட சமுதாயம் எடுப்பார் கைப்பிள்ளையாகமாறும் வழியை! ரிக்ஞேனே இருக்கும் இடத்திலே மனு! அரசாங்கம் செய்யும் வேலையைச் செய்வதற்கு புரோகிதர்கூட்டம்! இங்கே செல்வம்—ஏழைகளின் வரிச்சுமையைக் குறைக்க—பொதுவகையில் செலவிடப்பட—பூர்ஷுவாக்களிடமிருந்து அரசாங்கத்திற்குப் போகிறது. அங்கே ஆரியம் புத்திரனின்றி செத்துப் போன பூர்ஷுவா ராஜனிடமிருந்து தங்கமாகப் பிடுங்கி தன் இனத்தை பூர்ஷுவா ஆக்கிக்கொள்கிறது. எனவேதான் நாம் அன்று முதல் சொல்லி வருகிறேம்—ஜஸ்டிஸ் கட்சியாக இருக்கும்போதே சொன்னேம்—தி. மு. க. வாக இருக்கும் இன்றும் சொல்லி வருகிறேம்—ஆயிரம் ஏக்கர் வைத்திருக்கும் முத்தையா செட்டியாரும், தியாகேசமுதலியாரும், குட்டிபூர்ஷுவாக்கள்! அதோ நிற்கும் ஆரியம் பெரிய பூர்ஷுவா! அந்தஆரியம் படைத்த வைரமூக்குத்திக்காரி மதுரை மீனட்சியும் அந்த வர்க்கமே தான். வைரத் திருநாமத்தான் திருப்பதி வெங்கடாசலபதிகள் அந்த பூர்ஷுவா பரம்பரையில் சேர்க்கப்பட வேண்டியவர்களே. இந்த பூர்ஷுவாக்களோடு அவ்வகைளைப் படைத்த ஆரியப் பூர்ஷுவாவும் ஒழிக்கப்பட வேண்டுமென்கிறேம்.

ஆரிய எதிர்ப்பைக்கண்டு நம் மீது பாயும் கம்யூனிஸ்ட் தோழர்கள் சிந்திக்கவேண்டும்-நாங்கள் சொல்லும் பூர்ஷுவா ஒழிப்பு பற்றி! நாங்கள் காட்டும் பூர்ஷுவா கம்யூனிஸ்ட்கட்சியின் சட்டதிட்டத்தில் காட்டப்படவில்லை. காரணம் இந்த பூர்ஷுவா ரஷ்யாவிலோ-சீனவிலோ இல்லாமல் இந்தியாவில், குறிப்பாக திராவிடத்தில் மட்டும் வேரூன்றிவிட்ட புதிய இனம்—பெரிய எதிரி

வகுப்பு வாதிகளென நமக்கு வசைமாலை சூட்டுவோருக்கு எட்டி நின்று திட்டிவிட்டு தப்பியோடும் தோழர்களுக்கும் இந்த கட்டுரையை காணிக்கையாக்கிறேம்—அவர்கள் சிந்திப்பார்கள் என்ற நல்லெண்ணத்தோடு!

'சோமு' அச்சகத்தில் அச்சிடப்பட்டு, எஸ். தியாகராசுந்தரம் அவர்களால் வெளியிடப்பட்டது. ஆசிரியர் மு. கருணாநிதி ஜக்ரியா காலனி, கோடம்பாக்கம், சென்னை—24